Starting time 11.52 A.M.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.254/2015**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 16.10.2023 in accordance with the provision of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : கலியன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**6.** பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : கூளையன் மகன் ராமனின் சொத்து புல எண் 166/11-ல் உள்ளது என்றால், ஆமாம். என்னுடைய சொத்திற்கு எந்த பக்கத்தில் கூளையன் மகன் ராமனின் சொத்துள்ளது என்றால், வடக்கு பக்கம். என்னுடைய சொத்திற்கு தெற்கில் புல எண் 166/8-ல் யாருடைய சொத்து இருக்கிறது என்றால், தெரியாது. என்னுடைய சொத்திற்கு தெற்கில் என்னுடைய தம்பியின் சொத்துள்ளது என்றால், சரியல்ல, மேற்கில்தான் உள்ளது. என்னுடைய தம்பின் பெயர் என்னவென்றால், ஆறுமுகம். என்னுடைய சொத்திற்கு எந்த பக்கத்தில் ரோடு செல்கிறது என்றால், வடக்கு பக்கத்தில். அந்த தார் ரோட்டிற்கும் என்னுடைய சொத்திற்கு இடையில் யாருடைய சொத்துள்ளது என்றால், செல்வராஜ். செல்வராஜின் சொத்து குறித்து என்னுடைய வழக்கில் சொல்லவில்லை என்றால், சரியல்ல, செல்வராஜ்தான் என்னுடைய சொத்தையும் சேர்த்து கட்டியுள்ளதாக என்னுடைய வழக்கில் சொல்லியுள்ளேன், அந்த வீடு யார் பெயரிலுள்ளது என்று எனக்கு தெரியாது. நான் சொல்லும் வீடு செல்வராஜின் வீடும் அல்ல, அதை அவர் கட்டவும் இல்லை என்றால்,

சரியல்ல.

7. என் வீட்டிற்கு கிழக்கில் தார் ரோட்டிலிருந்து சந்து செல்கிறது என்றால், இல்லை, அது வீதியாகவே செல்கிறது. அந்த வீதிக்கும் வடக்கில் பெரியாண்டிச்சி அம்மன் கோவில் நிலம் உள்ளது என்றால், இல்லை, வீதிக்கும் மேற்கில்தான் உள்ளது. அந்த சந்தின் கடைசியில் செல்வராஜ் மனைவி கவிதாவின் மாடி வீடு உள்ளது என்றால், ஆமாம். வா.சா.ஆ.5-ல் யாருடைய சொத்து எந்த சர்வே எண்ணில் இருக்கிறது என்று குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. அதில் என்னுடைய சொத்திற்கு கிழக்கிலும், மேற்கிலும் யாருடைய சொத்து இருக்கிறது என்று அவர்களின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. வழக்கு சொத்து விவரத்திலும் சொத்திற்கு நான்கு பக்கத்திலும் உள்ள செக்குபந்தி விவரம் சொல்லவில்லை என்றால், சரிதான். சொத்தின் எந்த பக்கத்தில் எவ்வளவு நீளம், அகலத்திலுள்ள நிலத்தை சேர்த்து கட்டியுள்ளார்கள் என்பது குறித்து நான் என்னுடைய வழக்கில் சொல்லவில்லை என்றால், 20 அடி நீளம், 2 அடி அகலத்தில் கட்டியுள்ளார்கள். எந்த இடத்தில் சேர்த்து கட்டியுள்ளார்கள் என்பது குறித்து எனது வழக்கில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் தற்போது திருச்செங்கோட்டில் மலை அடிவார ரோட்டில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால், ஆமாம். நான் அதே இடத்தில் கயிறு வியாபாரம் செய்து வருகிறேன் என்றால், புதிய பேருந்து நிலையம் அருகில்தான் செய்து வருகிறேன். சுமார் 20, 30 வருடங்களாக நான் அங்குதான் வசித்து வருகிறேன் என்றால், ஆமாம். தாவா சொத்தில் தற்போது நான் குடியிருக்கவில்லை என்றால், சரிதான். தற்போது தாவா சொத்தில் என் தம்பிதான் குடியிருக்கிறார் என்றால், என் சார்பில் அவர்தான் பராமரித்து வருகிறார். சொத்து என்னுடைய சுவாதீனத்தில் இல்லாதபோது பொய்யாக பிரதிவாதி பெயரில் தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அதனால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending Time: 12.07 P.M.

ஒப்பம்/- என்.திலகேஸ்வரி

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.